செ.வெ.எண்-28 நாள்-11.09.2021

**அரியலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள மாபெரும் கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாமின் முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

அரியலூர் மாவட்டத்தில் நாளை 12.09.2021 நடைபெறவுள்ள கொரோனா வைரஸ் மாபெரும் தடுப்பூசி முகாமின் முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / பால் உற்பத்தி மற்றும் பால் மேம்பாட்டு இயக்குநர் **திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்களுடன் இன்று (11.09.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி, அரியலூர் நகராட்சியின் சார்பில் பழைய நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமினை பார்வையிட்டு, பரிசோதனைகள் குறித்தும், தடுப்பூசி முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் நாளை நடைபெறவுள்ள தடுப்பூசி முகாமிற்கு தேவையான தடுப்பூசி இருப்பு குறித்தும், அரியலூர் நகராட்சி எத்தனை வார்டுகள் உள்ளன எனவும், எத்தனை இடங்களில் முகாம்கள் நடைபெறவுள்ளது எனவும் கேட்டறிந்து, முகாம்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள நகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் வாலாஜாநகரம் சமுதாயக்கூடத்தில் முன்களப்பணியாளர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர் ஆகியவர்களைக் கொண்டு தடுப்பூசி முகாம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, தடுப்பூசி முக்கியத்துவத்தை குறித்து விளக்கினார். மேலும், பொதுமக்களிடையே சிறப்பாக விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தினார்.

மேலும், வெங்கடகிருஷ்ணாபுரத்தில் நடைபெற்ற சிறப்பு தடுப்பூசி முகாமில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டகீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு தகுதியுடைய நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுவதை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், நாளை நடைபெறவுள்ள சிறப்பு முகாம்களில் அனைத்து இடங்களிலும் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் மற்றும் நிழல் தரும் வகையில் பந்தல் அமைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

உலகளாவிய கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கொரோனா மூன்றாம் அலையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்வதற்கு கொரோனா தடுப்பூசியே பாதுகாப்பானதாகும். ஆகவே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, கொரோனா வைரஸ் மாபெரும் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. மேலும், பொதுமக்கள் உங்கள் வீட்டின் அருகிலேயே நடைபெறும் இம்முகாமினை பயன்படுத்தி அனைவரும் தடுப்பூசியினை செலுத்திக்கொண்டு கொரோனா தொற்று இல்லாத மாவட்டமாக மாற்றிட ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் **திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப.,** தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கீதாராணி, நகராட்சி ஆணையர் (பொ) திருமதி.தமயந்தி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**